விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 14 ஷஃபான் 10 இதழ்: 16

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-2-1991

## பரீட்சைக்கு தயாராகுமாறு மாணவருக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

"க. பொ. த. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சைக்குத் தம்மைத் தயார் செய்ய வேண்டும்" என்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

"யாழ். மாவட்டத்தில் பரீட்சைகள்" என்ற தலைப்பில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "யாழ் மாவட்டத்தில் மார்ச் மாத இறுதியில் 5ம் ஆண்டுப்

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டு.மாவட்டத்தில் — 2500 தமிழரை காணவில்லை 46,000 வீடுகள் சேதம்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இதுவரை 2500க்கு மேற்பட்ட தமிழ்மக்கள் காணமற்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 46 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன 2 லட்சம் மக்கள் அகதிகளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (153)

## ★ இராணுவத் தாக்குதல் தொடர்வதால்

# கிழக்கில் மீளக் குடியேற தமிழ் மக்கள் அச்சம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து, மீளக் குடியேறச் சென்ற தமிழர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன, இதனால் பாதுகாப்பற்ற சூழலில் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர இங்குள்ள மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள சில கிராமங்களில் குடியேறிய மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் தற்பொழுது 14முகாம்களில் அகதிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமரச் செல்லும் பிரதேசங்களில் இராணுவ நடமாட்டமும், முஸ்லிம் ஊர்காவல்படையினரின் துன்

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தால் சுட்டுக்கொலை

(திருமலை)

மூதூர் இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர், கடற்கரைச் சேனையை சுற்றி வளைத்து

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா படையினரால் — 411 ஆண்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 411 ஆண்கள் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன் தினம் காலை 5.30 மணியளவில் வெல்லவெளி, பாலையடிவேட்டை, மண்டூர், 13ம், 14ம் கொலனி ஆகிய முகாம்களிலிருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் நெடியவெட்டை, கல்வெட்டை, காக்காச்சிவெட்டை, களச்சேனை, பாலையடிவெட்டை, அலியாவெட்டை, மேற்குச்சேனை ஆகியபகுதிகளைச் சுற்றிவளைத்தனர்.

இந்த சுற்றி வளைப்பின் போது கைது செய்யப்பட்ட

(4ம் பக்கம் பார்க்க)

## தினமும் எண்பது லொறிகள் யாழ். செல்ல அனுமதி

[பூநகரி]

வவுனியா ஊடாக உணவுப் பொருட்களுடன் தினமும் 80 லொறிகள் யாழ்ப்பாணம் செல்வதற்கு வவுனியா இராணுவத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களுடன் வந்த 60 லொறிகள் நேற்று யாழ்ப்பாணம் செல்வதற்காக பூநகரியில் தரித்து நிற்கின்றன.

இன்று இந்த லொறிகள் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (23)

## மண்முனையில் இராணுவம் மீது புலிகள் தாக்குதல்

(மட்டுநகர்)

மண்முனை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் நேற்றுமுன் தினம் காலை 6 மணிக்கு மகிழடித்தீவுக்கு வரும்போது விடுதலைப்புலிகள் இடைமறித்து அதிரடித்தாக்குதல் மேற்கொண்டனர்.

மேற்படித்தாக்குதலில் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும்,

(4-ம் பக்கம் பார்க்க)

## கைதி மரணம்

(கொழும்பு)

கொழும்பு கொகுவலைப் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலிலிருந்த தமிழர் ஒருவர் தாக்கப்பட்டு மரணமானார்.

சக கைதி ஒருவராலேயே இவர் தாக்கப்பட்டு மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. [ரி]

## ஊர்காவல் படையால் வியாபாரிகள் வெட்டிகொலை

(யாழ்ப்பாணம்)

மன்னார்-புபசாலை 5-ம் கட்டை என்னும் இடத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கைதுசெய்யப்பட்ட இரு வியாபாரிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

கடந்த 22-ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த பள்ளிக்குடாவர் ஒருவர் கொலை செய்யப்பட்டவர்களை அடையாளம் காணச் சென்றபோது அவ்வுடல்களை முஸ்லிம் ஊர்காவல்படையினர் அகற்றி விட்டு இதுபற்றித் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று கூறி மறுத்துவிட்டனராம். (56)

## மன்னார் நகர்ப் பகுதியில் படையினர் சுற்றிவளைப்பு

(யாழ்ப்பாணம்)

மன்னார் நகர்ப்பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதால் அங்குள்ள பொதுமக்கள் வெளியேற முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் உணவுப் பொருள் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்கள் தாராளமாக எடுத்துவரப்படுவதையடுத்து பொருட்களின் விலை மீண்டும் சரியத் தொடங்கியுள்ளது.

மா, அரிசி, தேங்காயெண்ணெய், புளி, மிளகாய், மல்லி, உள்ளி, சவர்க்காரம் நிர்ணய விலைக்கு தாராளமாக கிடைத்து வருகின்றது.

## முஸ்லிம் ஊர்காவல் படையினர் சுட்டுக்கொலை

[மட்டுநகர்]

கிழக்கு மாகாணத்திலுள்ள ஐயங்கேணி என்னும் தமிழ் கிராமத்தில் இரு முஸ்லிம் ஊர்காவல் படையினர் அண்மையில் இனந்தெரியாதோர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## யாழ். வைத்தியசாலை குழு கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள மருந்துகள், உபகரணங்கள் பற்றாக்குறை ஊழியர்கள் பற்றாக்குறை மற்றும் சேதமடைந்த வைத்தியசாலைக் கட்டிடங்களை திருத்தியமைத்தல் ஆகிய குறைபாடுகள் சம்பந்தமாக கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சு செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையிலான குழு கொழும்பு செல்லவிருக்கிறது.

வைத்தியசாலை ஊழியர்களின் கஷ்ட நிவாரணப் படி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி தோமாஸ் எலிசபேத்

மலர்வு: 3-11-1942 உதிர்வு: 26-2-1990

திதி: 26-2-91

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

கணவன், மகன், உறவினர்.

107, டேவிட் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 4377)


## இன்று

(யாழ்ப்பாணம்)

அருட்திரு ஜே: ஏ: கருணைரர் சுவாமியின் 50வது வருட குருத்துவ தங்க யூபிலி நன்றிப் பலி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் யாழ்: ஆயர் பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் இன்று காலை 11 மணிக்கு நடைபெறும்.

## தற்கொலை

[யாழ்ப்பாணம்]

விரக்தியுற்ற இளைஞன் ஒருவர் நச்சுத் திராவகமருந்தித் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கடந்த வாரம் நவாலி தெற்கில் இடம் பெற்றுள்ளது.

ஜே.வசந்தன் [வயது 25] என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.


## வரி விளம்பரம்

### கலண்டர்கள், டயறிகள்

இவ்வாண்டுக்கான கலண்டர்கள், டயறிகள், பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலையவீதி, (பிறவுண்கம்பெனி அருகில்) யாழ்ப்பாணம்.

(எ-1116)

### வகுப்புக்கள்

Short hand & Typing, Book-keeping & Accounts வகுப்புகள் 01 - 03 - 91 ல் ஆரம்பமாகின்றன. பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். School of Business Administration, 16, 3-ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (4388)

### WANTED

Female English Short-Hand Typist call personaly on week days 9-00 a.m To 11 00 a m. Fudo, 39/17, Powei House Road, 3rd, Lane Jaffna. (C-4393)


## இராசி பலன்

26-02-1991

செவ்வாய்க்கிழமை

மேடம்: குடும்பகவலை, ஏமாற்றம், தொழில் பிரச்சனை, வெறுப்பு.

இடபம்: மனதில் களிப்பு, விருந்தயசாரம் அவசரமுடிவு.

மிதுனம்: பணச்சசரவு, குடும்பபிரிவு, சகோதர விரோதம்.

கடகம்: தற்பெருமை, நண்பருதவி, கடன்வசூல்.

சிங்கம்: அநாவசிய செலவு, தொழில் பிணக்கு, மனச்சுமை.

கன்னி: புதிய ஸ்தானம், பணப்புளக்கம், புத்திரர் மகிழ்ச்சி.

துலாம்: தீயவர் நட்பு, தொழில்லாபம், மாமனார் உதவி.

விருச்சிகம்: தான தர்மம், காரியதாமதம், வைத்திய செலவு.

தனுசு: அதிக சினம், தொழில் கஸ்டம், அவமதிப்பு, சிறுபிணி.

மகரம்: நல்லோர் சினேகம், தொழில் பாராட்டு, பயணம்.

கும்பம்: தெய்வீக சிந்தனை, புதிய உறவு, பெண் உதவி.

மீனம்: ஆத்மதிருப்தி, உடல் சோர்வு, குடும்ப ஒற்றுமை.

ஜோஸ்யர்


## வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்ரு"

உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

### நிலையான வைப்பு

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

### கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விவரம்

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11, 342, 354 | 14, 354, 927 | 23, 306, 910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100, 577, 492 | 110, 897, 760 | 116, 890, 354 |
| வங்கிக் கடன்கள் | 7, 718, 284 | 6, 539, 639 | 11, 364. 064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16, 613, 250 | 14, 832, 400 | 13, 700, 000 |
| வங்கி மீதிகள் | 10, 911, 712 | 3, 189, 064 | 1, 894, 245 |
| மொத்தச் சொத்துகள் | 127, 175, 677 | 143, 822, 862, | 162, 239, 787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19, 310, 887 | 23, 173, 830 | 23, 700, 680 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16, 880, 875 | 20, 025, 480 | 20, 833, 024 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 2, 330, 012, | 3, 148, 350 | 2, 867, 656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1, 775, 100 | 1, 506, 110 |

### பணிப்பாளர் சபை

எஸ். பி. ஈ. கருணாரட்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

எஸ். பாலசுப்பிரமணியம்,
A I. B. (Lond ), முகாமைப் பணிப்பாளர்

ஜே டி. நவரட்ணம்
A, I. B. (Lond.), பொதுமுகாமையாளர்

ஏ. எம். எச். பாரி
B. A. (Hons)

ஆர். பாலசுப்பிரமணியம்

1988ஆம் ஆண்டு 78ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டது.

பதிவு இல. NBS/R/90/021

மேலதிக விபரங்களைப் பெற

## ஷப்ரு

### யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(A 1109)



## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி

### கந்தையா - சிவக்கொழுந்து

தோற்றம்: 07-06-1904 மறைவு: 30-01-1991

30-1-91 சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டி கிரிகைகள் (27-2-91) புதன்கிழமை காலை கண்ணகி அம்மன் கோவில் அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிரிகைகள் (1-3-91) வெள்ளிக்கிழமை பகல் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

மைதிலி வாசா,
புங்குடுதீவு-10.

(சி-4392)

# 12,000 சிங்கள இளைஞரின் எதிர்காலம் இருளில்

(கொழும்பு)

தென்பகுதி சிறைகளிலுள்ள 12,000 சிங்கள இளைஞர்களின் எதிர்காலம் பெரும் கேள்விக் குறியாயிருப்பதாக 'மனித உரிமைகள் குழு' ஒன்று தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் மீது அரசு கடும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டு தொடர்ச்சியாக சிறையிலிட நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஜே வி பி சந்தேக நபர்கள், ஜே. வி. பி. தீவிரவாதிகள் என்றே இவர்கள் சிறையிடப்பட்டுள்ளனர். (சி)

# தமிழ்மக்கள் மீது அரசாங்கம் பிரயோகிக்கும் யுத்த முறை

## எஸ். எஸ். குமரன்

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பல முனைகளில் பல்வேறு வகையான தாக்குதல்களை நடாத்தி வருகின்றது. புலிகளுடன் யுத்தம் புரிகிறேன் என்று கூறித் தமிழ் மக்கள் மீது ஒரு யுத்தத்தைத் திணித்துள்ளது.

புலிகளுடன் யுத்தம் புரிவதை விடுத்து அரச படைகளும் விமானங்களும் பொது மக்களின் இலக்குகள் மீது ஏன் தாக்குதல்களை நடத்துகின்றன? இதிலிருந்து பார்க்கும் போது ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது திட்டமிட்டு யுத்தஞ்செய்து அவர்களை அழிக்கக் கங்கணம் கட்டி நிற்பது புலனாகும்.

கடந்த வருடம் யூன் மாதம் ஆரம்பித்த யுத்தம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தக்காலங்களில் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கும் பல்வேறு வகையான யுத்தங்களையும் நான்கு பகுதிகளாக நோக்கலாம். நேரடி யுத்தம், உளவியல் யுத்தம், பொருளாதார யுத்தம், கலாசார யுத்தம்.

### நேரடி யுத்தம்

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேரடியாகத் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்நேரடி யுத்த நடவடிக்கையென்பது தமிழர் மீது நேரடியாக அரசபடைகள் கட்டவிழ்த்து விடும் வன் முறைகளைக் குறிக்கும். அதாவது தமிழ் மக்களைக் கைது செய்தல், கொலை செய்தல், சித்திரவதை, காயம் அல்லது அங்கவீனம் அடையச் செய்தல் என்பவற்றை அரசபடைகளோ அன்றி விமான, கடற் படைக் கருவிகள் மூலமோ நடத்துதலைக் குறிக்கும்.

வட பகுதியில் முக்கியமாக யாழ். குடாப் பிராந்தியத்தில் இராணுவம் முகாம்களுக்குள் முடங்கியிருக்கின்ற படியால் விமானங்கள், உலங்கு வானூர்திகள் மூலமோ - கடலில் பீரங்கிகளைப் பயன்படுத்தியோ - முகாமிலிருந்து எறிகணைகளைப் பிரயோகித்தோ தமிழின அழிப்பை மேற்கொள்ளுகின்றன.

இராணுவ நடமாட்டம் காணப்படும் மட்டக்களப்பு, திருகோணமலையில் சில பகுதிகளில் அரச படைகளே நேரடியாக இன அழிப்புகளை மேற்கொள்ளுகின்றன. அதுமட்டுமன்றித் தமிழ் மக்களின் உடைமைகள் மீதும் அழிப்புக்களையும், அபகரிப்புகளையும் மேற்கொள்ளுகின்றன.

இந்நேரடி யுத்தம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தினசரி நடைபெறும் ஒன்றாகும். இதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் உடைமையிழப்புகளும் அதிகம். அதேவேளை பக்க விளைவுகளும், எதிர்காலத் தாக்கங்களும் நிறையவுள்ளன.

### உளவியல் யுத்தம்

தமிழ் மக்கள்மீது அரசு பிரயோகிக்கும் இன்னொரு யுத்த முறையே உளவியல் ரீதியான யுத்தமாகும். இந்த உளவியல் யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களது உளவுரணைப் பலவீனப் படுத்திப் பயத்தினால் அவர்களைப் பணியவைக்க முடியுமென அரசு எண்ணுகிறது. இதன்படி-

★ நள்ளிரவில் உறங்கும் வேளைகளில் திடீரென எறிகணைகள், குண்டுவீச்சு விமானங்கள், உலங்கு வானூர்திகள் மூலம் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகளை வீசுதல்.

★ மக்கள் கூட்டங்கள் மீதும், முக்கியமான நிலையங்கள் மீதும் குண்டுகளை வீசுதல், கல்விக்கூடங்கள், பொதுமக்களுக்கு அத்தியாவசியமான அரச தனியார் நிறுவனங்கள் என்பனவற்றின்மீது குண்டு வீசுதல் முதலியன இதனுள் அடங்கும்.

★ பரவலான குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளுதல்.

★ குறிப்பிட்ட ஒரு நிலையை அல்லது பிரதேசத்தை மீண்டும் மீண்டும் தாக்குதல். உதாரணமாக சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத் தாக்குதல், வல்லைவெளித் தாக்குதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான பல்வேறு தாக்குதல் உத்திகள்மூலம் பொது மக்களது மனநிலையைக் குழப்பி அவர்களை உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தி - பயப்படுத்தி அதன்மூலம் தமிழின வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த அரசு முனைகிறது. அதேபோன்று மனித முயற்சிகளையும் கல்வி, தொழில் முதலியவற்றைத் தடுத்து நிறுத்துதலும் ஒருநோக்கமாகும். இவை மனநோயாளரை உருவாக்கும் அபாயத்தைக்கொண்ட நடவடிக்கைகளாகும்.

### பொருளாதார யுத்தம்

★ தமிழ் மக்களின் பொருளாதாரத்தை நசுக்கும் நோக்குடன் சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் வேறொரு யுத்த முறையே பொருளாதார யுத்தமாகும்.

★ தமிழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் வழங்காது புறக்கணித்தல்.

★ விளைநிலங்கள்மீது குண்டுகள் வீசியும், வேறு பல முறைகளிலும் அழித்தல், படையினர் நெல் வயல்களை எரித்தலும் இதனுள் அடங்கும்.

★ பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான கிருமி நாசினிகள், உரவகைகள், விதைகள் என்பனவற்றை இங்கு எடுத்துவர அனுமதி வழங்காது தடுத்து வருதல்.

★ இங்குள்ள விவசாய, கைத்தொழில் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த விடாது தடுத்தல்.

★ தொழிலாளிகள், ஓய்வூதியர்கள் ஆகியோரது வேதனங்களை வழங்காது இழுத்தடித்தல், அத்துடன் ஊழியரது சம்பள முற்பணம், மேலதிக ஊதியம் ஆகியவற்றையும் வழங்காது உள்ளது.

(தொடரும்)

# ஆஸ்பத்திரி பஸ் சேவைக்கு பொதுமக்கள் இடையூறு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பஸ்சேவைக்குப் பொதுமக்களினால் இடையூறு செய்யப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

மல்லாகம், சுன்னாகம், மருதனார்மடம், மானிப்பாய் வீதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ்சேவைக்கு இந்த இடையூறு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ் குறிப்பிடப்பட்ட வீதியில் சேவையில் ஈடுபடும் சமயங்களில், சைக்கிள்களில் கும்பல்களாகப் பொதுமக்கள் செல்வதாலும், வீதியில் பெருமளவில் கூடி நிற்பதாலும் ஒழுங்கான சேவை நடத்தமுடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56)

# குவைத் நோக்கி 40 கிலோ மீற்றர் தூரம் பல்தேசப் படைகள் முன்னேற்றம்

[பக்தாத்]

பல்தேசப் படைகள் 40 கிலோ மீற்றர் தூரம் குவைத் நோக்கி முன்னேறியுள்ளனவுடன் பிரான்ஸ், பிரிட்டன் நாட்டுப் படைகளும் ஈராக்கின் எல்லையினுள் முன்னேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 3 லட்சம் படைகள்

3 லட்சம் நேசநாட்டுப் படைகள் கூட்டாக தரைத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன.

இரண்டாம் உலகப்போரின் பின் பெரும் எண்ணிக்கையிலான படையினர் பங்குகொள்ளும் தரைப்படைப் போர் இதுவாகும் என வர்ணிக்கப்படுகிறது.

### சதாம் ஹுசைன் குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, சோவியத் யூனியனின் சமாதானத் திட்டத்தை ஆராய்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் தரைத் தாக்குதலை ஆரம்பித்ததன் மூலம் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பெரும் துரோகமிழைத்துவிட்டார் என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் நேற்று குற்றம் சாட்டினார்.

தரைத் தாக்குதல் மூலம் சமாதானத்துக்கான பொன்னான சந்தர்ப்பத்தை இழந்துவிட்டதாகச் சோவியத் அதிபர் கொர்பச்சேவ் கவலை தெரிவித்தார்.

### குவைத்தீவு அமெரிக்கா வசம்

குவைத் கரைக்கு அப்பால் பிலைக்கா என்ற தீவை அமெரிக்க பாலூமிப் படைகள் கைப்பற்றியதாக பி. பி. சி. அறிவித்துள்ளது.

### ஈராக்கிய வீரர் கைது

ஈராக்கிய படைவீரர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் தரைப்படைத்தாக்குதலில் மனித கேடயமாகப் பயன்படுத்த பக்தாத்திற்கு 28,000 குவைத் நாட்டு மக்களை ஈராக் அழைத்துச்சென்றிருக்கின்றது என்று குவைத்தின் பிரதிநிதி ஒருவர் ஐ. நா. தலைமைச் செயலருக்கு எழுதிய கடிதத்தில் குற்றம்சாட்டியுள்ளார். (க-பூ மா)

# நச்சுவாயு பாவிக்கப்பட்டால் 4 லட்சம் இலங்கையர் தவிப்பர்

(கொழும்பு)

மத்தியகிழக்கு நாடுகளிலிருந்து நாடுதிரும்ப நாலுலட்சம் இலங்கையர் அவசரப்படுவதாக தொழிலமைச்சர் திரு. பிறேமசந்திர தெரிவித்துள்ளார்.

வளைகுடா போர் உச்சக் கட்ட நிலைக்கு தள்ளப்படும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளதால் போரில் நச்சுக்கிருமி, ரசாயன வாயு, நியூக்ளியர் குண்டுகள் பயன்படுத்தப்படும் சாத்தியம் அதிகரித்துள்ளது.

இதைதடுத்தே இவர்களை அங்கிருந்துஉடனடியாக வெளியேற்ற அரசு சர்வதேச நிறுவனங்கள் பலவற்றுடன் தொடர்புகொண்டு வான், கடல் வழி உதவிகளை நாடியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (சி)

# 1/4 போ. தேங்காய் எண்ணை 20ரூபாவாகவிற்றவருக்கு 2000 ரூபா அபராதம்

(நாவற்குழி)

மட்டுவிலில் ¼ போத்தல் தேங்காய் எண்ணெய் 20 ரூபாவாக விற்பனைசெய்த வர்த்தகர் ஒருவர் வர்த்தகர் சங்க கண்காணிப்புகுழுவினால் கண்டுபிடிக்கப்பட்டு 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது

இதேவேளை சரசாலையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் ஒரு றாத்தல் பாண் 9 ரூபா 50 சதமாகவும் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய் விலைகூட்டி விற்றது கண்டுபிடிக்கப்பட்டு அவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (107)

# 17 கிராமசேவையாளர் ஓய்வு

(சித்தன்கேணி)

யாழ் மாவட்டத்தில்கடமையாற்றும் பதினேழு கிராம சேவை அலுவலர்கள் சேவையில் இருந்து அறுபது வயதின் பேரில் இளைப்பாறுகின்றனர். [137]

# அரிசி விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

கால போக நெல் அறுவடையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் அரிசியின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. (172)

# 14,000 ஈராக்கிய வீரர்கள் தரைத் தாக்குதலில் கைது

(றியாட்)

பல்தேசபடைகளினுல் தரைத் தாக்குதல் ஆரம்பித்து 24மணி நேரத்தில் 14,000 ஈராக்கியர்கள் சிறை பிடிக்கப்பட்டுள்ளனரென அமெரிக்க இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத் நகரத்தை பல் தேசப்படைகள் நெருங்கிக் கொண்டிருப்பதாக சவுதி அரேபியா தெரிவிக்கும் அதே வேளை பல்தேசப் படைகளால் கைப்பற்றப்பட்ட பிரேதசங்களை மீட்கப் போரடிவருவதாக ஈராக் தெரிவித்துள்ளது.

## 60,000 காவல்படையினர்

ஈராக்கின் டலமிக்க 60 ஆயிரம் குடியரசுக் காவல் படையினர் போர்முனைக்கு வந்து கொண்டிருப்பதாகவும், நிலத்துக்கடியில் நிலைகொண்டிருந்த டாங்கிகளும் வெளியேறிதென் பகுதி நோக்கி நகருவதாகவும் நேசப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஈராக் முதன் முதலாகத் தரையிலிருந்து "இக்கேம்" ஏவுகணைகள் கொண்டு நேசப்படைகளின் கட்டளைகளைத் தாக்கியுள்ளன நேற்றும் இரண்டு ஸ்கட் ஏவுகணை கொண்டு ஈராக் இஸ்ரேலைத் தாக்கியது.

## "சாகும் வரை போராடு"

இதேவேளை ஈராக் வானொலி "சாகும்வரை போராடு மாறு" ஈராக் வீரர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சதாம் எழுதிய புத்தகம்

சதாம் ஹுஸைன் எழுதிய 'அல்சா கேம்ப்' என்ற புத்தகத்தில் உலக நெருக்கடி யுத்த ஆதாரம் ஆசியாவிற்கு மத்தியில் அரேபியர்களை ஒன்றுபடுத்தும் தனது நோக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

## ஈராக் கைதிகளுக்குத் தினச் சம்பளம்

நேசப் படைகள் வசமிருக்கும் சுமார் 2,000 ஈராக்கிய யுத்தக் கைதிகளுக்குத் தினச் சம்பளம் வழங்கப்படவிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## 140 எண்ணெய் வயல்களுக்குத் தீவைப்பு

ஈராக் குவைத்திலுள்ள 140 எண்ணெய் வயல்களைத் தாக்கி நாசமாக்கி நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணெய் வயல்களுக்கு தீவைத்துள்ளதாகவும் அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.


# தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும்
வேலைவாய்ப்புப் பெறுவதற்கு

## ஓர் அரிய சந்தர்ப்பம்!

★ கொம்பியூட்டர் பயிற்சி
(COMPUTER PROGRAMMING BASIC)
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
— காலம் 4 மாதம்

★ றேடியோ, ரெலிவிஷன்
வீடியோ டெக் றிப்பியறிங்
சகல இன றேடியோ, ரெலிவிஷன் வீடியோ டெக் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். —காலம் 4 மாதம்

★ றீ வைண்டிங்
மின் மோட்டார், மின்விசிறி, ராஸ்போமர் டைனமோ றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும் —காலம் 4 மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்
வீட்டு மின்சார வேலை, மின்சாரப்பொருட்கள் திருத்தல் பயிற்சியளிக்கப்படும்
—காலம் 2 மாதம்

★ எயர்கொண்டிசன் றிப்பியறிங்
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்
—காலம் 4 மாதம்

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP
—காலம் 4 மாதம்

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
20-02-91 (கிழமை நாட்கள்)
24-02-91 (சனி, ஞாயிறு)

குறிப்பு: சித்தியடையும் மாணவர்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(றெயில்வே கடவை அருகாமை மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

(ஏ 1117)


## யாழ். வைத்தியசாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை பெற்றுக் கொள்ளுவதற்கும் இக்குழு முயற்சி எடுக்கவுள்ளது. [153]

## மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில நாட்களாக இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ள நிலையில் வாழும் இப்பகுதி மக்கள் உணவு சுகாதார மற்றும் அடிப்படை வசதிகளின்றி பெரும் இன்னல்களை எதிர் நோக்கியுள்ளனர்.

எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பீதியுடன் இங்குள்ள மக்கள் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (56)

## பரீட்சைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப் பரீட்சையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன."

"இப்பரீட்சைகள் பதிவு பல வகைகளையும், வினாத்தாள்களையும் பெற்றோரும், மாணவர்களும் பொருட்படுத்தக்கூடாது. மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்."

"ஆண்டு 9ல் படிக்கும் மாணவர்களுக்கும், 1991ஆம் ஆண்டு இறுதியில் தொழில் நுட்பச் சான்றிதழ் பரீட்சையும் நடைபெற உள்ளது."

"இந்த 4 பரீட்சைகளும் பரீட்சை ஆணையாளரால் தான் நடத்தப்படும்" என்றார். (152)

# வவுனியா நகரில் பஸ் சேவை ஆரம்பம்

(வவுனியா)

கடந்த எட்டுமாத இடைவெளிக்குப் பின்னர் வவுனியாவில் சில பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பஸ்சேவை ஆரம்பிப்பதற்கு முன்னதாக வவுனியா இ. போ. ச. கட்டிடம் கடந்த 20-ம் திகதி இராணுவத்திடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது.

வவுனியாவிலிருந்து அநுராதபுரம் மதவாச்சி ஆகிய இடங்களுக்கும் நகரசபை மற்றும் பஸ்நிலையத்திலிருந்து யாழ் வீதியில் தாண்டிக்குளம் இராணுவ தடைமுகாம் வரையும் இச்சேவைகள் நடைபெறுகின்றன.

# தொழில் முன்னிலைப் பாடம் கட்டாயபாடமாகும்

(யாழ்ப்பாணம்)

"தொழில் முன்னிலைப் பாடம் பாடசாலைகளில் ஒன்பதாம் ஆண்டு மாணவர்களுக்கு கட்டாய பாடமாகும்" என்று யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது ஐம்பத்து மூன்று பாடநெறிகள் தொழில் முன்னிலைப் பாடம் இனம் காணப்பட்டு குறிப்பாக விவசாயம், வர்த்தகம் மனையியல் போன்றவற்றில் பயிற்சிஅளிக்கப்படும்.

பதினைந்து அம்சங்களின் தொடர் மதிப்பீடு முறையில் எழுபது புள்ளிகளும் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் 30 புள்ளிகளும் பெற்ற மாணவர்களுக்கு கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் தராதரப் பத்திரம் வழங்கப்படும் இச்சான்றிதழ் பெற்றவர்கள் உயர்படிப்பை மேற்கொள்வதற்கும், சுயமாகவே வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றார். (152)

## உற்பத்திக் குழு இணைப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில், கமநல பிரதேச கிராமிய உற்பத்திக் குழுக்களின் இணைப்புக் கூட்டம் இன்று உடுவில் மகளிர் கல்லூரியில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுமென தமிழீழ ஆய்வுநிறுவனம் தெரிவித்துள்ளது. (வி)

## கண்டெடுக்கப்பட்டது

கோரதீவு ஐயனார் கோயிலுக்கு அருகாமையில் சைக்கிள் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சைக்கிளிற்கு உரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் கோரதீவு ஐயனார் கோயில் உரிமையாளரிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## இராணுவத்தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புறுத்தலும் வழமை போல் இருப்பதனால் பாதுகாப்பற்ற சூழலில் தம்மால் வாழமுடியாதிருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (வி)

## இராணுவத்தால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலபொதுமக்களைக் கைது செய்தனர்.

கைதுசெய்த பொதுமக்களில் க. சோணலிங்கம் என்பவரை சப்பூரில் வைத்து சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி சம்பவம் கடந்த 22-ம் திகதி நடைபெற்றது. (வி)

## வாகனம் மீது தாக்குதல்

(திருமலை)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனம் மீது இராணுவம் தாக்குதல் மேற்கொண்டதில் வாகனம்பலத்த சேதமடைந்தது. அண்மையில் மூதூரிலிருந்து வெருகலை நோக்கி வந்த மேற்படி வாகனம் மீது மாலை 4மணியளவில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம். [வி]

## மண் முனையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் தரப்பில் நேசன். கண்ணதாசன் [illegible] ஆகியோர் வீரமரணமடைந்ததாகவும் கூறப்படுகின்றது (வி)

## சிறிலங்கா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நானூறு ஆண்கள் மண்டூர் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 150 பேர் இளம் [illegible] தினர் என்று தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை கதிரவெளி என்னும் கிராமத்தில் 11 தமிழர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்:

சி. லோகாஸ் (30 வயது), சா. விஜயன் (22 வயது), பொ. இராசா (24 வயது), க. கிருபா (35 வயது), க. நவராசா (24 வயது), வே. நாகராசா (28 வயது), மு. இரத்தினம் (24 வயது) ஆகியோர் உட்பட 11 பேர் இப்பகுதியில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டனர்.

இம்மாவட்டத்தில் உள்ள வாகரை, கதிரவெளி, மாங்கேணி ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வி]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 86-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.